மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : செக்போஸ்ட்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று உறுப்பினர்கள் யோசனை சொல்லவில்லை. சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுதான் சொன்னார்கள். செக்போஸ்ட்டை எடுத்துவிடவேண்டும் என்று அவர்கள் தீர்மானம் போட்டது, அது அவர்களுக்கிருக்கும் சில அரசியல் கோட்பாட்டின் காரணமாக இருக்கலாம். அதற்கும் இந்த யோசனைக்கும் முரண்பாடு ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : மாடர்ன் ரைஸ் மில்லில் அதிக அவுட்டர்ன் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், ஆந்திராவில் ஒரு காட்டேஜ் இண்டஸ்ட்ரியாக, பம்ப் செட் வைத்துக்கொண்டிருக்கிறவர்களெல்லாம் ஒரு ஹல்லர் வைத்து, அதிக உற்பத்திக்கு வழி செய்து கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி நாமும் நம்முடைய மாநிலத்தில் ஃப்ரீ லைசென்ஸ் கொடுப்பதன் மூலமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நல்லது. ப்ரொட்யூசருக்குக்கூட நல்ல அரிசி தயார் செய்ய வாய்ப்பு ஏற்படும். அதைச் சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றி ஏற்கெனவே பரிசீலனை செய்ததில் அது நல்ல நிலைமை இல்லை என்பதனால் இப்பொழுது இந்தப் புதிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஓப்பன் மார்க்கெட்டில் அரிசி அதிகப்படியான விலைக்கு விற்பதற்கான பல காரணங்களில் ஒன்று, அதிகாரிகள் ஆலைகளிடம் வாங்கிக்கொள்ளும்படி உத்தரவிட்டதற்குப் பிறகு, அந்த ஆலைகளில் பில் போடுவது ஒரு தொகை, அதைவிட அதிகப்படியாக வாங்குவது என்ற நிலைதான் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, நேரடியாக விவசாயிகளிடத்திலேயே கொள்முதல் செய்து, வியாபாரிகளுக்குப் பங்கீடு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் கொண்டிருக்கிற கருத்து இன்னும் சில பேருக்குக்கூட இருக்கிறது. ஆனால், அந்தக் கருத்துக்கள் நடைமுறைக்கு எந்த அளவுக்கு ஒத்து வரும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

செந்துறையில் அரசினர் மாணவர் இல்லம்

* 215 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தைச் சார்ந்த செந்துறையில் அரசினர் மாணவர் இல்லம் ஒன்று நிறுவுவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பகுதியின் பொருளாதாரச் சீர்குலைவு காரணமாக அங்கிருக்கும் ஏழை மக்கள் உயர் கல்வி பெற வசதி இல்லாமலிருக்கிறது. எனவே, மீண்டும் ஆய்வு செய்து, நடப்பு ஆண்டிலாவது ஒரு விடுதி திறக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நடப்பு ஆண்டில் 12 மாணவர்கள் இல்லங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே இரண்டு மதுரை மாவட்டத்தில்—மாணவிகளுக்காக கன்னிசேர்வைப் பட்டியிலும், மாணவர்களுக்காக ஜக்கம்பட்டியிலும் துவக்கப்பட்டிருக் கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள், தங்களுடைய தொகுதியில் செந்துறையில் ஒரு அரசினர் மாணவர் இல்லம் துவக்கவேண்டுமென்று மனு தந்தார்கள். அதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. தேவைப்படுமானல், அடுத்த ஆண்டில்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

கூலி நிர்ணயக் குழுக்கள்

*216 வின.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொழிலாளர்களின் நலனைக் கருதி அமைக்கப்படும் சம்பளம் அல்லது கூலி நிர்ணயக் கமிட்டிகளில் முதலாளி, தொழிலாளி பிரதி நிதிகள் நியமிக்கப்படுகிறார்களா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

(உ) நியமனம் செய்வதற்கு முன்னல் யார் யாரிடம் ஆலோசனை கேட்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) 1948-ம் ஆண்டு குறைந்தளவுக் கூலிச் சட்டத்தின் 5 (1) (a) பிரிவையொட்டிப் பட்டியலில் கண்ட வேலையின் குறைந்தளவுக் கூலி வீதங்களை உறுதிப்படுத்த அல்லது திருத்தியமைக்க அரசு ஒரு குழுவை அமைத்தது ; இக்குழுவில், தொழிலதிபர்களும் பட்டியலில் கண்ட வேலையில் உள்ள தொழிலாளர்களும் பங்கு பெறும் வகையில் அந்தந்த மாநில அரசு நியமிக்கக்கூடியவர்கள் உறுப்பினராக இருப்பர் ; தொழி லதிபர்களும் தொழிலாளர்களும் இதில் சம எண்ணிக்கையிலிருப்பர் ; அக்குழுவிலுள்ள மொத்த உறுப்பினர்களில் 1/3 பங்குக்கு மேற்படாத தனிப்பட்டவர்கள் அதன் உறுப்பினர்களாயிருப்பர். அத்தகைய தனிப் பட்டவர்களில் ஒருவர் 1948-ம் ஆண்டு குறைந்தளவுக் கூலிச் சட்டத்தின் 9-வது பிரிவையொட்டி இக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவார்.

(உ) இக்குழுவின் தலைவர் உட்பட இதன் உறுப்பினர்கள் பொதுவாகத் தொழிலாளர் ஆணையரின் பரிவுரையின்மீது நியமிக்கப் படுகின்றனர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பல தொழிற்சங்கப் பிரிவுகள் இருக்கின்றனவே, அத்தனைத் தொழிற்சங்கப் பிரிவுகளைச் சார்ந்தவர் களையும் இதில் பிரதிநிதிகளாகச் சேர்த்துக் கொள்ளுவதற்கான நடவடிக்கை ஏதாவது உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு தொழிலுக்கும், அது பற்றி ஆராயும்போது, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழி லாளர் தலைவர்கள் பலதரப்பட்டவர்களையும் சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. மாநில அளவில் உள்ள குழுக்களைப் பொறுத்தவரை யில், பல தரப்பட்டவர்களுக்கும் அதில் பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, will the Government give representation to all the Labour Unions in this Committee because there is no question of one union for one industry had as there are different kinds of unions with different party affiliations ?